பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 58 நாள்: 25.05.2017

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் 10ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற 20 பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பரிசுகள் மற்றும் காசோலைகளை வழங்கினார்கள்.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (25.05.2017) தலைமைச் செயலகத்தில் 10ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற 20 பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பரிசுகள் மற்றும் தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 70 சென்னை மேல்நிலைப்பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதில் 2016–17 கல்வியாண்டில் நடைபெற்ற 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 3028 மாணவர்கள், 3274 மாணவியர்கள் என மொத்தம் 6302 மாணவ / மாணவியர்கள் தேர்வு எழுதினர். அதில் 2697 மாணவர்கள், 3168 மாணவியர்கள் என மொத்தம் 5865 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 93.1 ஆகும்.

2016–17ம் கல்வியாண்டில் 100% தேர்ச்சி பெற்ற 20 பள்ளிகளின் விவரங்கள்

| | |
|---|---|
| 1 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கொடுங்கையூர்** |
| 2 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, அரிநாராயணபுரம்** |
| 3 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, எஸ்.என்.செட்டி தெரு** |
| 4 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, (தெலுங்கு) ஆஞ்சேநேய நகர்** |
| 5 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, வால்டாக்கீஸ் சாலை** |
| 6 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை** |
| 7 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கொய்யா தோப்பூ** |
| 8 | **சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மார்க்கெட் தெரு** |
| 9 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கீழ்பாக்கம்** |
| 10 | **சென்னை மேல்நிலைப்பள்ளி, சுப்புராயன் தெரு** |
| 11 | **சென்னை உயர்நிலைப்பள்ளி , டி.வி. புரம்** |
| 12 | **சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்** |
| 13 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, வி.பி.கோயில் தெரு** |
| 14 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, வன்னிய தேனாம்பேட்டை** |
| 15 | **சென்னை உயர்நிலைப்பள்ளி கே.பி. ரோடு** |
| 16 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கெனால் பேங்க் ரோடு,** |
| 17 | **சென்னை மேல்நிலைப்பள்ளி, ஆழ்வார்பேட்டை,** |
| 18 | **சென்னை உயர்நிலைப்பள்ளி , ஜாபர்கான்பேட்டை** |
| 19 | **சென்னை உயர்நிலைப்பள்ளி , கோயம்பேடு** |
| 20 | **சென்னை உயர்நிலைப்பள்ளி கோட்டூர்** |

100/100 மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவிகள் – 189

450 மதிப்பெண்களுக்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் – 312

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் பொருட்டு 10 மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் சிறந்த மாணாக்கர்களை தேர்வு செய்து அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் 2 அம்மா உண்டு உறைவிட பள்ளிகளில் தங்க வைத்து சிறந்த ஆசிரியர்களை கொண்டு **SPARK GIFTED AND TALENTED** என்ற திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது. கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய மாணவ, மாணவியர்களுக்கு **SPARK CHALLENGERS** என்ற திட்டத்தின் கீழ் காலை நேர சிற்றுண்டி வழங்கப்பட்டு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. மாலை நேர வகுப்புகளின் போது அவர்களின் சோர்வினை போக்கும் விதமாக சுண்டலும் வழங்கப்பட்டு வருகிறது. தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் அனைத்து வகுப்புகளுக்கும் வழங்கப்படுகிறது.

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் வெற்றி பெற்று பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்பில் சேரும் மாணவ, மாணவியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் ஊக்கத் தொகை ரூ.45,000/– வழங்கப்படுகிறது. மேலும், கலை மற்றும் அறிவியல், ஆசிரியர் பயிற்சி, செவிலியர், சட்டம் போன்ற அனைத்து மேல் படிப்புகளுக்கும் அவர்கள் படித்து முடிக்கும் காலம் வரை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

மேலும், சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 22 பள்ளிகளுக்கு தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி, இனிவரும் கல்வியாண்டில் மாணவ, மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்கிடவும், அதிக மதிப்பெண்கள் பெற்றிடவும், ஆரோக்கியத்துடன் கல்வி பயில தேவையான வழிவகைகளை செய்திடவும், கல்வி அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அரசு சிறப்பு செயலாளர் திரு.ஆர்.ஜெயா, இ.ஆ.ப., ஆணையாளர் (நகராட்சி நிர்வாகம்) திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.மகர பூஷணம், இ.ஆ.ப., துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., துணை ஆணையர் (கல்வி) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., கல்வி அலுவலர் திருமதி.டி.ரஞ்சனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**